# மணப்பாறை நகராட்சி

**2020- ஆம் ஆண்டு மே மாதம் (13.05.2020) 13 – ஆம் தேதி புதன்கிழமை மாலை 04.00 மணிக்கு நகர்மன்ற அலுவலகத்தில் நடைபெற்ற சாதாரண கூட்ட நடவடிக்கைகள்.**

| மன்ற கூட்டம் நடைபெற்ற நாள் | வரிசை எண் மற்றும் மன்ற கூட்டப் பொருள் | தீர்மானம் |
|---|---|---|
| 13.05.2020 | **பொருள் – 1**<br>இந்நகராட்சி பொது சுகாதார தூய்மை பணியாளர்களுக்கு காய்ச்சல் கண்டறியும் பணிக்காக வெப்பமாணி (Infra red thermometer) தமிழ்நாடு நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 15-ன் கீழ் ரூ.61950/- மதிப்பீட்டில் பெறப்பட்டமை மன்றத்தின் பதிவிற்கு வைக்கப்படுகிறது.<br><br>**<u>அலுவலகக்குறிப்பு</u>:-** பதிவு செய்யலாம்<br>(1003/2020/எச்2) | **தீர்மான எண்.778 அனுமதிக்கப்பட்டது.** |
| 13.05.2020 | **பொருள் – 2**<br>இந்நகராட்சி பொது சுகாதார பிரிவில் (frontline staff ) தூய்மை பணியாளர்களுக்கு அவர்களின் உடல் மேம்படுத்துவதற்காக பூவன் வாழைப்பழம் தமிழ்நாடு பிணினா புரொடியூசர் கம்பெனி லிட் நிறுவனம் மூலம் ரூ.5000/- மதிப்பீட்டில் பெறப்பட்டது மன்றத்தின் பதிவிற்கு வைக்கப்படுகிறது.<br>**<u>அலுவலகக்குறிப்பு</u>:-** பதிவு செய்யலாம் | **தீர்மான எண்.779 அனுமதிக்கப்பட்டது.** |
| 13.05.2020 | **பொருள் – 3**<br>இந்நகராட்சி பொது சுகாதார பிரிவில் கொரோனா நோய் தடுப்பு பணிக்காக தளவாட பொருட்கள் டெல்லி ஹார்டுவேர்ஸ், திருச்சி நிறுவனத்தில் விலைப்புள்ளி பெற்று தொகை ரூ.2,37,270/- தமிழ்நாடு நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 15-ன் கீழ் வழங்கியமை மன்றத்தின் பதிவிற்கு வைக்கப்படுகிறது.<br>**<u>அலுவலகக்குறிப்பு</u>:-** மன்றம் பதிவு செய்யலாம்<br>ந.க.எண்.1003/2020/எச்2, | **தீர்மான எண்.780 அனுமதிக்கப்பட்டது.** |

| | | |
|---|---|---|
| 13.05.2020 | **பொருள் – 4**<br>தமிழ்நாடு அரசால் அறிவிக்கப்பட்ட தொற்று நோய் வரிசையில் சேர்க்கப்பட்ட கொரோனா (COVID-19) தொற்று நோய் பரவலை தடுத்திடும் விதமாக அரசு ஆணை எண் .193 வருவாய் (ம) பேரிடர் மேலாண்மைத்துறை நாள் .15.04.2020-ல் அறிவித்துள்ள 144 ஊரடங்கு தடைச்சட்டத்தின்படியும், தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 298 மற்றும் 306-ன் படியும் பொதுமக்கள் அத்தியவசிய பொருட்களை வாங்க கடைவீதிக்கு வரும்போது கொரோனா கிருமி நோய் தொற்று பரவாமல் இருக்க முகக்கவசம் அனிந்து வர வேண்டு ம் சமூக இடைவெளியை கடைபிடிக்க வேண்டும் . முகக்கவசம் அனியாமல் வெளியில் வரும் நபர்களிடம் ரூ.100/- அபராதம் வசூல் செய்யப்படும் இந்த அபராதத்தொகையை வசூலித்து நகராட்சி கருவூலத்தில் சேர்க்கும் பணியில் துப்புரவு அலுவலர் , துப்புரவு ஆய்வாளர் , வருவாய் ஆய்வாளர், நகரமைப்பு ஆய்வாளர் , வருவாய் உதவியாளர் மற்றும் துப்புரவு மேற்பார்வையாளர் பதவியில் இருப்பவர்கள் ஈடுபடுத்தப்படுவார்கள் மேற்படி செயல்திட்டங்களுக்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**<u>அலுவலகக்குறிப்பு</u>:-**<br>மன்றம் அனுமதி வழங்கலாம் ந.க.எண்.1003/2020/எச்2, | **தீர்மான எண்.781**<br>**அனுமதிக்கப்பட்டது.** |
| 13.05.2020 | **பொருள் – 5**<br>மணப்பாறை நகராட்சிக்கு சொந்தமான வாகனம் ஈப்பு TN45 BZ 7050க்கு ஆயில் சர்வீஸ் செய்தல், Roots Horn, Door Lock Repaire சரிசெய்தல், Wheel Alignment & interior Cleaning Vechile water wash & Electrical Checkeup மற்றும் Break Checkup & Dioyanamo work ஆகிய பணிகள் செய்ய உத்தேச மதிப்பீடு ரூ.37,500/-க்கு திருச்சி சிவா ஆட்டோ மொபைல்சில் பணி மேற்கொள்ள பணியின் அவசர அவசியம் கருதி வேலை உத்திரவு வழங்கியதை மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>**<u>அலுவலகக்குறிப்பு</u>:-**<br>1. மன்றம் அனுமதிக்கலாம்,<br>2. செலவினம் பொதுநிதியிலிருந்து மேற்கொள்ளலாம் | **தீர்மான எண்.782**<br>**அனுமதிக்கப்பட்டது.** |
| 13.05.2020 | **பொருள் – 6**<br>திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சி தலைவர் திருச்சிராப்பள்ளி அவர்களின் செயல்முறை கடித ந.க.எண்:செ.மு.அ9/1377/2020 நாள்:07.04.2020-ன் படி மணப்பாறை நகராட்சிகுட்பட்ட பகுதிகளில் கொரோனா வைரஸ் எச்சரிக்கை தடுப்பு நடவடிக்கைக்கு கரூர் பாராளுமன்ற உறுப்பினர் உள்ளூர் வளர்ச்சி திட்டம் 2019-2020-ம் ஆண்டின் கீழ் புதிதாக கிருமி நாசினி தெளிக்கும் வாகனம் கொள்முதல் செய்வதற்க்கு ரூ.10,00,000/- மற்றும் முழுகவச உடை தலாரூ.750/- வீதம் 154 எண்ணம் பெற ரூ.1,15,500/- மற்றும் முக கவசம் (Triple Layer Mask) 2800 எண்ணம் தலா ரூ.10 வீதம் பெறுவதற்கு | **தீர்மான எண்.783**<br>**அனுமதிக்கப்பட்டது.** |

| | | |
|---|---|---|
| | ரூ.28,000/-ம் ஆக மொத்தம்ரூ.11,43,500/- நிதி ஒதுக்கீடு செய்து நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது.<br>தேசிய பேரிடர் காலத்தில் பொருட்கள் / வாகனங்கள் வாங்க தமிழ்நாடு ஒப்பந்தப்புள்ளி நடைமுறை சட்டம் 1998,SECTION 16A,FOR EMERGENCY Related Activities to Combat Covid-19-ல் விலக்களித்து கொள்முதல்செய்து கொள்ள அறிவுறுத்தப்பட்டுள்ளது<br>அதன்படி (உள்ளாட்சி நிறுவனங்களால்) இந்நகராட்சியில் Covid-19 கொரோனா நோய் தடுப்பு பணிக்காக இயந்திரம் மற்றும் வாகனம் கொள்முதல் செய்வதற்க்கு மகேந்திரா & மகேந்திரா நிறுவனத்தின் அங்கீகரிக்கப்பட்ட விற்பனையாளரான Adharvaa Tractor & Farm Equipments,கரூர் அவர்களால் மகேந்திரா கிரேப் மாஸ்டர் பிளாஸ்ட் ஸ்பேரேயர் (Mahindra Grape Master Blast Sprayer - 600 Litre) 1 No மற்றும் மகேந்திரா டிராக்டர் (Mahindra Tractor-Bp 575)-1 No ஆகியவற்றின் விலை விபரப்பட்டியல் ரூ.11,88,800/- பெறப்பட்டுள்ளது.<br>மேலும் மணப்பாறை நகராட்சி கொரோனா வைரஸ் நோய் தடுப்பு பணியாளர்களுக்கு அனுமதிக்கப்பட்ட முழு கவச உடை (PPE) விலைப்புள்ளி பெற்று விநியோக நிறுவனமான DREAM INFRA TUTICORIN நிறுவனத்திடமிருந்து குறைந்த விலைப்புள்ளியாக கவச உடை ஒன்றுக்கு ரூ .750/- வீதம் ரூ.1,15,500/- விலைப்புள்ளி பெறப்பட்டுள்ளது.<br>மேலும் முக க வசம் (FACE MASK ) 2800 எண்ணிக்கை ரூ .10/- வீதம் கண்காணிப்பாளர் மத்திய சிறை திருச்சி மூலமாக பெறவும் மன்ற அனுமதி வேண்டபடுகிறது .மேற்கண்ட செலவினத்தை கரூர் பாராளுமன்ற உறுப்பினர் உள்ளூர் வளர்ச்சி திட்டம் 2019-2020-ம் ஆண்டின் கீழ் ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை ரூ.11.43,500/- இலட்சம் போக எஞ்சிய தொகையினை நகராட்சி பொது நிதியில் இருந்து பணி மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**<u>அலுவலகக்குறிப்பு:-</u>**<br>1. மன்றம் அனுமதிக்கலாம்<br>2. மேற்படி பணிக்கான செலவினத்தை கரூர் பாராளுமன்ற உறுப்பினர் உள்ளூர் வளர்ச்சி திட்டம் 2019-2020-ம் ஆண்டின் கீழ் ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை ரூ.11.43,500/- போக மீதமுள்ள தொகையினை நகராட்சி பொது நிதியிலிருந்து செலவு செய்து கொள்ளவும் மன்றம் அனுமதி அளிக்கலாம். | |

**தனி அலுவலர்**
**மணப்பாறை நகராட்சி**